**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.136/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 4 |
| Name : | ராஜேஸ்வரி |
| Father's/Husband Name: | ராஜ்குமார் |
| Village : | முருங்கன்குடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 57 / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.08.2024

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி – மனோஜ்குமார், 2ம் எதிரி – ராஜேஸ், ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராக எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 உமாபார்வதி எனது பக்கத்து காட்டை சேர்ந்தவர். 08.09.2017ம் தேதி சுமார் மதியம் 03.00 மணியளவில் எங்களது பக்கத்துக்காட்டுகாரனான உமாபார்வதி காட்டில் பப்பளி பயிர் செய்யப்பட்டு இருந்தது. அப்போது பப்பளி வாங்க வந்த இருநபரிடம் பழங்களை காட்டுவதற்காக பழக்காட்டிற்குள் உமாபார்வதி அழைத்து சென்றார். அப்போது என்ன நடந்தது என்று தெரிவில்லை. சத்தம் கேட்டு நாங்கள் வந்து பார்த்த போது ஆட்கள் அங்கு இல்லை. உமாபார்வதி மட்டும் இருந்தார். அவர் பழங்களை பார்க்க வந்ததாக இருவர் டூவிலரில் வந்ததாகவும் அவர்கள் நான் கழுத்தில் அணிந்திருந்த தாலி சரடு, மோதிரம், தோடு, ஆகியவற்றை பறித்து சென்றுவிட்டதாக

சொன்னார். அது சம்மந்தமாக அவர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எந்த வாகனத்தை ஓட்டி வந்தார் என்று நான் கேள்விப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 உமாபார்வதி எனக்கு ஓப்படியா உறவு முறை ஆவார். போலீசார் விசாரணையிலும் அவர் எனக்கு ஓப்படியா உறவு முறை தான் என்று சொன்னேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன நகைகளை தான் பறித்து சொன்றார்கள் என்று அ.சா.1 என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த தேதி சொல்ல முடியுமா என்றால் 10.09.2017ம் தேதி விசாரித்தார்கள். சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அ.சா.1 எனக்கு உறவு முறை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.136/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 5 |
| Name | : | மணியரசன் |
| Father's/Husband Name: | | பிச்சைபிள்ளை |
| Village | : | சித்தளி |
| Taluk | : | ஆலத்தூர் |
| Age | : | 43 / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.08.2024

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( 1ம் எதிரி – மனோஜ்குமார், 2ம் எதிரி – ராஜேஸ், ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சித்தளியில் மளிகை கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எங்கள் ஊரை சேர்ந்த தாமரைச்செல்வனும் நானும் சித்தளிக்கு போய் கொண்டு இருக்கும் போது எனது அத்தை செல்லமாளின் நகை காணாமல் போனது சம்மந்தமாக ஏற்கனவே புகார் அளித்திருந்தோம். அது சம்மந்தமாக பேரளியில் பைபஸ் அருகில் வைத்து நானும் தாமரைச்செல்வனும் கையொப்பம் செய்தோம். மற்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. ( **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மற்றும் சாட்சியாக உள்ள முதலாவது கையொப்பம் அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலீஸ் விசாரணையில் கடந்த 12.09.2017ம் தேதி நானும் எங்கள் ஊரை சேர்ந்த தாமரை செல்வனும் பேரளி பஸ்ஸ்டாப்பில் நின்று பேசிக்கொண்டு இருந்த போது 12.00 மணியளவில் TN 45 AX 1362என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் வந்த 29 வயது மதிக்கத்தக்க நபரை எவ்வித ஆசை வார்த்தையோ, அச்சுறுத்தும் இல்லாமல் தானகவே முன்வந்துபோலீசார் விசாரித்த போது அவர் தன் பெயர் ராஜேஸ் என்றும் சம்பவம் சம்மந்தமாக ஒப்புக்கொண்டு அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் எங்கள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது என்றும் அதற்கு அத்தாட்சியாக நானும், தாமரைச்செல்வனும் சாட்சியாக கையொப்பம் செய்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதராக உண்மை சம்பவத்தை மறைத்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததுபற்றி தெரியாது என்றும் அதில் உள்ள சங்கதிகளை தெரியாது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.